ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி அ. பிரஜோத்பத்தி௵ ஆனி௴ பகுதி சு.
Vol 8. June & July 1931. No. 6.

முக்கோற்பகவர்.

உலகத்தில் தத்வஞானத்தைப் பெற்று உஜ்ஜீவிப்பதற்கு வேதத்தையே முக்ய ப்ரமாணமாகக் கொள்ளத்தக்கதென்பர். வேதம் ஒரு புருஷனால் செய்யப்படாததொன்றாதலால் தோஷமற்றதாயிருக்கும். அதனால் இதிற் சொல்லப்பெறுவனவெல்லாம் உண்மையாயிருக்குமென்பது பற்றியே இது முக்ய ப்ரமாணமாக விளங்குகிறது. ‡ உபப்ரம்மணங்களான இதிஹாஸ புராணங்களும் அரிதுணர்தற்பாலதான வேதப்பொருளைத் தெளிவாக வெளியிடுகின்றதனால் ப்ரமாணங்களாகும். இதுநிற்க, வேதமும் தன்னுடைய ஆப்ததையை (உண்மையை)த் தெரிவித்தற்கு "ப்ரஹ்மவாதினோவதந்தி" ப்ரஹ்மஜ்ஞாநிகள் இங்ஙனமுரைக்கின்றார்கள் என்று எடுத்துக்காட்டியதினால் ஆப்தவாக்யமும் ப்ரமாணமாகும். அந்த ஆப்தர்களும் "சுடர்மிகுசுருதியுளிவையுண்டசுரனே" என்று தம்முடைய ஆப்ததையைத் தெரிவிக்க வேதத்தையெடுத்துக்காட்டியதினால் வேதமும் ஆப்தவாக்யமும் ஸமப்ரதானமாகுமென்று கொள்ளத்தக்கது.

இங்ஙனமிருக்கினும் வேதம் ஒருபடியாகவுரைக்காமல் பல்வேறு வகையாக வுரைத்துச் செல்கின்றதனால் நுண்ணுணர்விலார்க்கிது

‡ உபப்ரம்மணம்—விளங்கச்செய்வது.

பெரிதும் ஐயத்தை விளைக்கும். பிர்ம்ம வித்துக்களாயிருப்பார் வேதத்தின் முடிவுகளை நன்கறிந்து நிச்சயித்துரைக்கும் பெற்றிய ராதலால இவர்கள் வாக்யம் தெளிவடைதற் கேதுவாயிருக்கும். ஆதலால § ஆப்தவாக்யம் ப்ரபல ப்ரமாணமாகக் கொள்ளத்தக்கது.

இஃதன்றி, சில ஆப்தர்கள் வேதமாகிய சாதனமின்றியே ‡ ஸர்வேசுவரனுடைய அநுக்ரஹவிசேஷத்தால் அவனது ஸ்வரூப ரூபகுண விபூதிகளை உள்ளபடியே சாக்ஷாத்கரிக்கும் பெற்றியரா யிருப்பர். இவர்கள் தத்வங்களை ஸர்வேசுவரன் தானே காட்டக் கண்டதுபோல ஸ்வப்ரயத்தனத்தாற் காணும் வேதம் அவ்வளவு தெளிவாகக் காணமுடியாதென்பது ஒருதலையாதலால் ஆப்தவாக்யம் ப்ரபல ப்ரமாணமாகத் தட்டில்லை.

ஆப்தவாக்யமே ப்ரபல ப்ரமாணமென்று மதித்து பீஷ்மரை நோக்கி, "𑌕𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌣𑌾𑌂 𑌭𑌵𑌤𑌃 𑌪𑌰𑌮𑍋 𑌮𑌤𑌃" "கோ தர்மஸ்ஸர்வ தர்மாணாம் பவத: பரமோமத:" எல்லாத் தர்மங்களுள் எந்தத் தர்மமானது சிறந்ததென்று உமால் சம்மதிக்கப் பட்டதோ அதைச் சொல்லவேண்டுமென்று தருமபுத்திரர் வினவினர். செல்வநம்பிகள் வல்லபதேவ பாண்டியனைநோக்கி, "𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌸𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌵𑍇𑌦𑌾𑌶𑍍𑌚" "தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம்வேதாச்ச" என்று தர்மமுறையறிந்த ஆப்தர்கள் வாக்யமே முக்யப்ரமாணமாகு மாதலால் அவர்கள் வாயிலாகப் பரவஸ்து இன்னதென்றறிந்து கொள்ள வேண்டும் என்று அருளிச் செய்தனர். இதுவரையு முரைத்ததனுல் ஆப்தவாக்யமே முக்ய ப்ரமாணமாகுமென்பதை நன்கறியலாம்.

ஆப்தர் என்பது † முக்கோற்பகவரையுங் குறிக்கும். எங்ஙன மெனின் ? முற்றத்துறந்தவர்களிடத்திலே ஆப்தத்வ முண்டு.

---

§ ஆப்தன்—ஓரர்த்தத்தை உள்ளபடி யறிந்து தானறிந்தவாறே பிறருக்கு உபதேசிப்பவன்.

‡ ஸர்வேசுவரனுடைய ஸ்வரூப குணங்களை அவனருளாலறிந்தவர்கள்—ஆழ்வார்கள்.

† முக்கோற்பகவர்—திரிதண்ட சன்யாஸிகள். (பகவர்-குணமிஷ்டர்).

உலகப்பற்றுடையாரிடத்தில் ஆப்தத்வமுண்டாகமாட்டாது. இது பற்றியே திருவள்ளுவரும் அறமுதற்பொருள்களை உலகிற்குள்ளவாறுணர்த்துவார் முற்றத்துறந்தவரே யாவரென்று "நீத்தார் பெருமை" என்ற அதிகாரத்தான் அவர்களியல்பெடுத்தியம்பினர். தொல்காப்பியரும்,

§ "நூலேகரகமுக் கோன்மணையே
ஆயுங்காலை யந்தணர்க்குரிய"

என்று முக்கோற்பகவரின் இயல்பெடுத்தியம்பினர். இஃதன்றியும் தலைவனோடு சென்ற தலைவியைச் செவிலித்தாயானவள் பாலை வனத்தின் வழியாகத் தேடிச்செல்கின்றபோது உண்மையை யறிந்துகொள்ள எதிர்ப்பட்ட முக்கோற்பகவரை வினவுவதோர் புலனெறி வழக்குண்டு. அது வருமாறு:—

எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ
லுறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலு
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்

§ இதன்பொருள்:—முந்நூலும் குண்டிகையும் (கமண்டலமும்) முக்கோலும் ஆமைமணையும் போல்வன அந்தணர்க்குரிய என்பதாம். ஈண்டு அந்தணரென்று பொதுச்சொல்லாற் சுட்டினாரேனும் விசேஷணங்களை நோக்கின் அச்சொல் திரிதண்ட சந்யாஸிகளைக் குறிப்பிடுமென்பதறியலாம்.

§ இதற்கு நச்சினார்க்கினியருரை வருமாறு:—

இஃது உடன்போய தலைவிபின் சென்ற செவிலி இடைச்சுரத்து முக்கோற்பகவரைக் கண்டு இவ்வகைப்பட்டாரை ஆண்டுக் கண்டீரோவென வினவியாட்கு, அவரைக் கண்டு அஃதறமெனவே கருதிப்போந்தோம்; நீரும் அவர்திறந்து எவ்வம்பட வேண்டாவென எடுத்துக் காட்டி, அவர் தெருட்டியது.

(இ-ள்.) எறித்தரு * * * போறிர்—என்-து, பெருமா! அந்தணீர்! உறியிலே தங்கின கமண்டலத்தையும் † அரி அயன் அரனென்னும் மூவரும்

† சித் அசித் ஈசுவரன் என்ற மூன்று தத்வங்களே உள்ளனவாமென்பதைப் புலப்படுத்துவதற்கு முற்றத்துறந்தார் முக்கோலைத்தரிக்கின்றனரென்பது ஸம்ப்ரதாயம் வல்லார் துணிபு.

வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறண்மக னொருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்னா ரிருவரைக் காணிரோ பெரும
காணே மல்லேங் கண்டனங் கடத்திடை
யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவர றாயிர்நீர் போறிர் ;

ஒருவரென்று சொல்லுதல் தன்னிடத்தே அமைந்த முக்கோலையும் முறைமைபடத் தோளிலே வைத்து எறித்தலைச்செய்கின்ற ஞாயிற்றின் கதிர்களைத் தாங்குகையினாலே எடுக்கப்பட்ட குடைநிழலிலே, வெவ்விய காட்டிடத்தே போதலை இயல்பாகவுடைய ஒழுக்கத்தினையுடையீராதலான் உம்மை வினவுகின்றேன் ; இக்காட்டிடத்து என்னுடைய மகளொருத்தியும் வேறொருத்தி மகனொருவனும் பிறரறியாமற் தங்களிலே கூடின தாங்கள் இப்பொழுது பிறர் அறிந்த கூட்டத்தினையுடையராயினர் ; அத்தன்மையார் இருவரைக் காணாதிருந்தீரோ ? இக்காட்டிடைக் காணாதிருந்தேம் அல்லேம்; கண்டு அஃதறமென்றே கருதிப்போந்தேம்; ஆண்மக்கட்குக் கூறும் அழகினையுடைய தலைவனோடே இவ்வரிய சரத்தைப் போகக்கருதிப்போந்த மாட்சிமைபட்ட அணியினையுடைய மடப்பத்தையுடையாளுக்குத் தாயார் தன்மையை உடையீர்போலே இருந்தீர் ; எ - று.

அரியயனரனென்னும் மூவரையும் ஒருவனாகவல்லது வேறாக நினையாத நெஞ்சத்தாலே ஐம்பொறியும் நுமக்கு ஏவல் செய்தலை இயல்பாகவுடைய கோட்பாட்டையும் உமக்குரிய ஒழுக்கத்தையுமுடைய அந்தணீரென்க. குறிப்பு, ஆகுபெயர்.

பெருமாவென்றான் அவர்கள் ஆசிரியனாகிய பெரியோனை. அந்தணர் அவன் மாணாக்கர். அவர்களைப் பெருமா அந்தணீரென விளித்தாள். பெயர்கள் ஒருவனை ஒருவன் ஆற்றுப்படுத்த செய்யுளின்மையில் முன்னிலை சுட்டிய ஒருமைக்கிளவி பன்மையொடு முடிந்ததல்லாமையுணர்க.

காணிரோ ? குறுகிநின்றது. கண்டேமென்னாமற் காணேமல்லேங் கண்டேமென்றதனால் அங்ஙனம் போகின்றவரை அறிந்து விலக்கல் அறமன்றென்று போந்தேமாகக் கொள்க. போறிரென்றார், தேடிவருவாள் செவிலியென்பது உணர்ந்து.

இது தரவு.

பலவுறு * * * கனையவே—எ - து, நறியனபலவுங் கூடும் நறிய சந்தனமரங்கள் மெய்ப்படுப்பார்க்குப் பயன்கொடுப்பதல்லது மலையிடத்தே

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யு
நினையுங்கா லும்மக ளுமக்குமாங் கனையளே ;

சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுக்
தேருங்கா லும்மக ளுமக்குமாங் கனையளே ;

ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யுஞ்
சூழுங்கா லும்மக ளுமக்குமாங் கனையளே ;

எனவாங்கு,

இறந்த கற்பினாட் கெவ்வம் படாஅன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றன
ளறந்தலை பிரியா வாறுமற் றதுவே.

பிறந்தனவாயினும் அச்சந்தனங்கடாம் அம்மலைக்கு என்னபயனைக் கொடுக்கும்? ஆராயுங்காலத்து நம்முடைய மகள் பயன்படும் பருவத்து நமக்கும் பயன்படான் ; எ - று.

சீர்கெழு * * * கனையளே—எ - து, தலைமை பொருந்திய வெள்ளிய முத்துக்கள் அணிவார்க்குப் பயன்படுவதல்லது கடலிடத்தே பிறந்தன வாயினும் அம்முத்தங்கடாம் அக்கடலுக்கு என்ன பயனைக் கொடுக்கும்? ஆராயுங்காலத்து நம்முடைய மகளும் பயன்படும் பருவத்து நமக்கும் பயன்படாள்? எ - று

ஏழ்புணர் * * * கனையளே—எ - து, எழுநரம்பாற் கூட்டிய இனிய ஓசைகள் பாடுவார்க்குப் பயன்கொடுத்தலல்லது யாழிடத்தே பிறந்தனவாயினும் அவ்வோசைகடாம் அந்த யாழுக்கு என்னபயனைக் கொடுக்கும்? ஆராயுங் காலத்து நம்முடைய மகள் பயன்படும் பருவத்து நமக்கும் பயன் படான் ; எ - று.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு; அசை.

இது தனிச்சொல்.

இறந்த * * * மற்றதுவே—எ - து, ஆதலான் மிக்க கற்பினையுடையாளுக்கு வருத்தமுறாதே கொள்ளுமின். இருமுதுகுரவரிலுஞ் சிறந்த

இங்குச்செவிலி முக்கோற்பகவரை வினவியதும் அதற்கவர் உள்ளவாறெடுத்துபதேசித்ததும் நோக்க முக்கோற்பகவரிடத்து ஆப்தத்வ முண்டென்பது நன்கு வெளியாயிற்று.

இதற்கு நிதர்சனமாக இராமாயண பாரதங்களில் சில வரலாறு காணப்படுகின்றன.

அவை:—

இராவணன் தன் தங்கையாகிய சூர்ப்பணகைவாயிலாகச் சீதாபிராட்டியினெழில் நலங்களைக் கேள்வியுற்றுப் பிராட்டியாரிடத்திற் காதல்கொண்டு அவரையடைய முயன்றனன். பின்னர் மாரீசனிடத்திற் சென்று தன் மனநிலையைத்தெரிவித்து அவனை மாயமானும்படி செய்து இராமபிரானிருக்கும் சூழலையடைந்து ராமலக்ஷ்மணர்களைப்பிரித்துப்பிராட்டியார் தனித்திருக்கும் சூழ்ச்சி செய்தனன். அப்பொழுது இராவணன் ‘ இனி நாம் எந்த ரூபத்தைக்

கணவனை வழிபட்டு அவன் பின்னே போனாள். இம்மையில் இங்ஙனங் கற்புப் பூண்டு நிகழ்த்தும் இவ்வில்லறமே அறங்களிற் றலையான அறம்; மறுமையில் இவ்விருவரும் நீங்காமற் சுவர்க்கத்திலே செல்லும் வழியும் அவ்வழிபாடே; எ - று.

இது சுரிதகம்.

படரன்மின் ஒருசொல், படர்மினென்பதன் மறையாதலின்.

அறத்திடத்து நின்று நீங்காதவாறென்று பொருள் கூறிற் றலைப்பிரியாவாறெனப் பகரவொற்றுப் பெறுதல்வேண்டும். * “ ஐகார விறுதிப் பெயர்நிலை முன்னர் - வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே” என்றலின். மற்று வினைமாற்றாய் மறுமையை உணர்த்திற்று ஆறுமென்ற உம்மை சிறப்பு.

இதனாற் செவிலிக்குத் தன்மையென்னும் மெய்ப்பாடு பிறந்தது.

“ நூலே கரக முக்கோன் மனையே - யாயுங் காலை யந்தணர்க்குரிய ” என்பதனாற் கரகமும் முக்கோலுங் கூறினார்.

இது பதினோரடித்தரவும் மூன்றடித் தாழிசையும், அசைநிலையாகிய தனிச்சொல்லுஞ் சிறுமைக்கெல்லை கூறுமையின் ஆசிரியத்திற்குக் கூறிய மூன்றடிச் சிறுமையும் பெற்ற சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

கொண்டால் பிராட்டியார் நம்புதற் கிடனுண்டு' என்று தனக்குள் ஆய்ந்து,

இளைவனேகலுமிறவுபார்க்கின்ற
வளையெயிற்றிராவணன்வஞ்சமுற்றுவான்
முளைவரித்தண்டொருமூன்றுமுப்பகைத்
தளையரிதவத்தவர்வடிவந்தாங்கினன்

ஊனிலனுமெனவுலர்ந்தமேனியன்
சேணெறிவந்ததோர்வருத்தச்செய்கையன்
பாணியினடத்திடைப்படிக்கின்றுனென
வீணையினிசைபடவேதம்பாடுவான்

பூப்பொதியவிழ்ந்தனநடையன்பூதலம்
தீப்பொதிந்தாமெனமிதிக்குஞ்செய்கையன்
காப்பரு நடுக்குறுங்காலன்கையினன்
மூப்பெனும்பருவமுமுனியமுற்றினன்

தாமரைக்கண்ணோடோர்தவத்தின்மாலையன்
ஆமையினிருக்கையன்வளைந்தயாக்கையன்
நாமநூன்மார்பினனணுகினனரோ
தூமனத்தருந்தியிருந்தகுழல்வாய்.

உணவில்லாதவனைப் போல வற்றிய உடலினையுடையவனாகவும், மிகுந்த தூரத்திலிருந்து வந்த துன்பத்தின் செயலினையுடையவனாகவும், வீணையிசைபோல வேதமோதுபவனாகவும், மலர் விரிவது போல மெல்லநடத்தலையுடையவனாகவும், பூமியானது நெருப்பைப் பொதிந்துள்ளதென மதித்து அஞ்சி யடிவைப்பனாகவும், கால் கை நடுக்கமுடையவனாகவும், மூப்பென்ற பருவமே வெறுக்கத்தக்க சரீரத்தையும் முப்புரிநூலையுமுடையவனாகவுமுள்ள ஓர் திரிதண்ட சந்யாஸியாய்ப் பிராட்டியார் இருக்கையை அடைந்தான். பிராட்டியாரும், 'இவன் முற்றத்துறந்த முனிவனும்' என்று ஸத்கரித்தார்.

அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை செய்துவருகிற காலத்தில் துவாரகாபுரியை யடைந்தனன். அங்குச் சுபத்திரையை மணம்

புரிந்துகொள்ளவேண்டும் என்று காதலுற்று, "பாகன்னமொழிக் கனிவாய் முத்தமூரற்பாவை நலம்பெற முக்கோற்பகவனுன்" என்றபடி திரிதண்ட சந்யாஸியாகி பலராம கிருஷ்ணர்களின் அரண்மனையை அடைந்தான். அப்பொழுது அவர்கள் முனிவரை நல்வரவேற்றார்கள். பின்னர் கண்ணபிரான் அருச்சுனன் கருத்தறிந்து, பலராமரின் கட்டளைப்படி சுபத்திரை யிருக்கும் கன்னிகாமாடத்தைச்சார்ந்த உத்தியான வனத்தில் அர்ச்சுனனாகிய முக்கோற்பகவனை இருக்கும்படி செய்து சுபத்திரையைப் பணிவிடை செய்யக் கட்டளையிட்டு இருவருக்கும் மணம் செய்வித்தனன்.

இங்கு இராவணனும் அருச்சுனனும் தம் குணங் குறி செயல்களைக் கண்டு பிறர் நம்புதற்கு முக்கோற்பகவரானுர்கள் என்பதனுல், முக்கோற்பகவரிடத்தில் ஆப்தத்துவம் உண்டென்பது தெள்ளிதிற் புலனுயிற்று. மேலும் பண்டைநூலாகிய சங்கநூல்களிலும் ஏனையசந்யாசிகளை வினுவுவதாக ஒரு துறையுமின்றி முக்கோற்பகவரை வினுவுவதாகத்துறை காணப்படுவதினுலும், இவர்களிடத்தில் ஆப்தத்துவம் உண்டென்பது பண்டைக்காலம் தொட்டுவந்த அப்படிப்பட்ட வழக்காமென்பதூம் தேற்றம்.

ப. அ.

ஸ்ரீ:

நம்பிள்ளை வைபவம்.

——:O:——

(34-ம் பக்கத்தொடர்ச்சி).

நம்பிள்ளை திருமேனியில் கோவுசாத்தி யெழுந்தருளியிருந்த பொழுது ஒரு சமயத்தில் பிள்ளை யெங்களாழ்வானும் * அம்மங்கி யம்மாளும் பிள்ளை திருமேனி நிலையை அறிந்து செல்லும் பொருட்டு அங்கெழுந்தருளினர். அங்ஙனம் எழுந்தருளிய அப் பெரியோர் பிள்ளை திருமேனி அப்பொழுதும் பாங்குறாமை கண்டு அதற்கு ஒரு பரிகாரஞ் செய்வதாகத் துணிந்தனர். அங்ஙனமே எங்களாழ்வான் நியமனத்தினால் அம்மங்கியம்மாள் பிள்ளை பக்கல் மிகப்பரிவுடன் அபிமந்திரிக்கக்கருதி ஒரு பாத்திரத்தைத் திருக் கையிலிட்டுத் தொடப்புக்கனர். அதுகண்டு பிள்ளை கூச்சத்தால் திருமேனியை ‡ இருய்த்தருளினர். அவர்களும் அதுகண்டு திருவுள்ளம் வருந்தினவர்களாய்ப் பிள்ளையை நோக்கி உம்முடைய

---

* பிள்ளை யெங்களாழ்வான்—இவர் உடையவர் திருவடிகளிற் சார்ந்த எழுபத்துநான்கு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர்; பூர்வ சிகை ஸ்ரீவைஷ்ணவ வகுப்பினர். இவர் அவதரித்த இடம் திரு வெள்ளறை.

இவர் உடையவர் நியமனத்தினால் ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற்கு விசிஷ்டாத்வைத பரமாக ஸ்ரீபாஷ்யத்தின் கருத்துக்கிணங்க ஒருரை வகுத்தவர்; உடையவர் தம் அந்திமதசையில் சகலார்த்தங்களை யும் இவர்க்கு அறிவிக்கும்படி திருக்குருகைப் பிரானபிள்ளான் கையிற் காட்டிக்கொடுத்தருளினர். அங்ஙனமே இவரும் பிள் ளான்பால் நின்றும் சகலார்த்தங்களையும் பெற்றுத் தந்திருவுள்ளத் தில் தேக்கிக்கொண்டு சிஷ்யர்கள் பலர்க்கும் கடல் மடை திறந்தாற் போன்று மிக்க கம்பீரத்துடன் எடுத்துரைத்துத் தரிசனம் நிர் வகித்து வரலாயினர்; இவரது ஒப்புயர்வற்ற பெருமைகேட்ட நடாதூரம்மாள் என்னும் பெரியார் இவரையடைந்து ஸ்ரீபாஷ்யம் முதலான சகலார்த்தங்களையும் கேட்டுப்பின்பு ஸ்ரீபாஷ்ய நிர்வாஹ கராய் விளங்கினர். உத்சாகத்துடன் அர்த்தங்களை எடுத்தியம்பும் சொல்வளமுடைமை பற்றி இவரைத் தினவுகெடச் சொல்வன் திரு வெள்ளறைச்சோழியன், என்று ஆன்றோர் பல விடங்களிலுங் கொண்டாடா நிற்பார்.

‡ இருய்த்தல்—அஞ்சிப் பின் வாங்குதல்.

விஷயமாக நீர் ப்ரவர்த்தித்தாலன்றோ உமக்கு † ஸ்வரூப ஹானியுண்டாவது, அங்ஙனமின்றி உம்முடைய விஷயமாக யாங்கள் ப்ரவர்த்திசெய்யும்பொழுது உமக்கு ஸ்வரூபஹானி எவ்வாறு உண்டாகும்? ஒருபொழுதும் உண்டாகாது. என்று சில § மேற்கோள்களையும் கூறினர்.

---

† இங்கு ஸ்வரூபஹானியாவது ஈச்வர பாரதந்த்ர்யமான தன்னிலை யழிகை. [ஹானி—கேடு.]

§ ஸ்ரீ ஆளவந்தார் திருநாடலங்கரித்தபோது நம்பெருமாள் நியமனத்தின்படி தமக்குண்டாயிருந்த ராஜருஜையாகிய பராக்ருதாநுபவ சேஷத்தைத் தமது அத்யந்த சிஷ்யரான மாறனேர் நம்பிக்குப் பிரஸாதித்தருளினர். அவரும் அந்த ருஜைதனை ஆசார்யப்ரஸாதமாக எண்ணி மிகவும் விருப்புடனேற்று மகிழ்ச்சியுடன் அநுபவித்து வந்தனர். இங்ஙனம் நிகழும் நாளில் அந்த ருஜாவேதனையின் மிகுதியால் மாறனேர் நம்பி ஊணுறக்கமின்றி வருந்தியிருப்பதுகண்ட பெரிய நம்பிகள் அவருக்குத் தளிகைப் ப்ரஸாத முதலியன கொண்டுபோய்க் கொடுத்து உரிய பணிகள் பலபுரிந்து வருவாராயினர். ஒருநாள் இரவிலே அவ்வாறே மாறனேர் நம்பி பொருட்டு, பெரியநம்பிகள் தளிகைப்பிரஸாதங் கொண்டுசெல்வதையறிந்த உடையவர் அவர் திருமேனி காவலின்பொருட்டு அவர் அறியாமல் உடன் எழுந்தருளினர். அவ்வாறெழுந்தருளிய எம்பெருமானார் அங்கு மாறனேர் நம்பியின் துன்ப நிலையையும், தமது ஆசார்யரான பெரியநம்பிகள் அவர்க்குச் செய்யுந் தொண்டுகளையும் கண்டு திருவுள்ளம் பொறாது மாறனேர் நம்பிக்குண்டாயிருந்த ராஜருஜையாகிய துன்பத்தைத் தீர்த்தருளும்படி நம்பெருமாளைநோக்கி ப்ரபத்தி பண்ணினர். உடனே நம்பெருமாளருளால்ருஜையுந்தீர்ந்தது. அதுகண்ட மாறனேர் நம்பி தமதாசார்ய ப்ரஸாதத்தை இப்பொழுது இழந்துவிட்டமை குறித்து மிகவும் வருந்திப் பெரியநம்பிகள் முன்னிலையில் கல்லைக்கொண்டு தமது தலையில் மோதிக்கொள்ளத் தொடங்கினர், அதுகண்ட உடையவர் நம்மாலன்றோ இவருக்குத் துன்பம் நேர்ந்தது என்று கருதி மீட்டும் நம்பெருமாளை ப்ரார்த்தித்தனர். உடனே அந்த ருஜையும் மாறனேர்நம்பிபால் வந்துற்றது. அவரும் அதுகண்டு அகமிக மகிழ்ந்தனர். இதுபோன்ற பாரார்த்ய ப்ரவர்த்திகள் பலவற்றை

அவையனைத்துங் கேட்ட பிள்ளை அவர்களை நோக்கி எனது நோய் நீங்கும் பொருட்டு நீங்கள் சில ¶ வசனங்களையன்றோ நம்பியிருக்கிறீர்கள் அங்ஙனமே யானும் * ஒரு வசனத்தைத் தஞ்சமென்று பற்றியுள்ளேன்காணீ ரென்றனர். அவர்களும் அது யாது? கூறுவீரென்றனர்.

அப்பொழுது பிள்ளையும் அவர்களை நோக்கிக் கூறுவார்:— வாரீர்! ஜீயர் தமது சரம தசையில் அடியேங்களை அருளுடன் குளிரநோக்கி, த்வயமொழிந்த மற்றை மந்திரங்கட்கும் சிவ பஞ்சாக்ஷர முதலிய மந்திரங்கட்கும் யாதொரு வாசியுமில்லையென்றருளிச் செய்தனர் என்றனர். அதுகேட்ட அவர்களும் பிள்ளையை நோக்கி, பிள்ளை! ஆயின் ‡ திருமந்திரம் செய்வதென்? என்றனர். அதற்குப் பிள்ளையும் அதுதான் செய்வதென் † விவரிப்பதும் விவரிக்கப்படு

எம்பெருமானார் வைபவத்தில் பரக்கக் காணலாம். இங்கு நம்பிள்ளையின் திருமேனி நோய் நீங்கும்பொருட்டுத் தாங்கள் செய்யக் கருதிய ப்ரவர்த்திக்கு இதுபோன்ற மேற்கோள்களை யெடுத்துக் கூறினரென்பதாம்.

¶ அனைவர்க்கும் தஞ்சமாதற்குரிய எம்பெருமானைத் தஞ்சமென்று பற்றாது சில ப்ரமாண வசனங்களைத் தஞ்சமாகப்பற்றுதலும் ஒருவகையில் ப்ரயோஜனாந்தரம்போலுமாதலின் இவ்வாறு கூறினர்.

* ஒரு வசனமென்றது த்வயம். இங்கு அதனாற் குறிக்கப்பட்ட எம்பெருமானை.

‡ நாராயண வாசுதேவ விஷ்ணு என்னும் வ்யாபக மந்திரங்கள் மூன்றனுள் முதலதான திருமந்திரமே மற்றை இரண்டினும் சிறந்ததாயும் சகல அர்த்தங்களையுந் தன்னுட்கொண்டு விளங்குவதாயுமிருத்தலின் இதனை "வேதங்களும் ரிஷிகளும் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் விரும்பினர்கள்" இங்ஙனம் பெருமையுடைய அரிய திருமந்திரத்தைக் கழித்து த்வயத்தையே பெருமையாகப் பிள்ளை கூறுவதனை ஆசங்கித்து இத்தனை பெருமையெல்லாம் உடைய திருமந்திரத்துக்குப் புகல்தான் என்னென்று கருதித் திருமந்திரம் செய்வதென்?' என்று வினவினர்.

† விவரிப்பதும் விவரிக்கப்படுவதுமாகிய தன்மை (விவரண விவரணீய பாவம்) பின் வருமாறு.— திருமந்திரத்தில் நம:பதத்

வதுமாகிய தன்மையினால் த்வயத்தில் அடக்கமென்று கூறினர் அதனைக் கேட்ட அவரிருவரும் அங்ஙனமாயின் த்வயத்தைக் கொண்டு அப்பரிகாரஞ் செய்வதில் என்ன குறை என்றனர். அப்பொழுது பிள்ளை அவர்களை நோக்கி, 'விடாய்த்தவன் விலவறத் தண்ணீர் குடிக்குமாபோலே இருப்பதொன்றன்றோ § இது; ஆகையாலே தன்னோய் நீங்கும்பொருட்டுச்செய்யும் ப்ரபத்தியும் ஸ்வரூப ஹாநி; பிறர் நோய் நீங்கும்பொருட்டுச் செய்யும் ப்ரபத்தியும் ஸ்வரூபஹானி; எங்ஙனமெனின்,—* தன்பொருட்டுப் ப்ரவர்த்திக்கில் ஸ்வரூப பாரதந்த்ர்ய தூஷணமாமித்தனையே ‡ பிறர் விஷயமாக ப்ரவர்த்திக்கில் பரக்ஞான பரசக்திகளுக்குத் தூஷணமாமென்றருளிச்செய்தனர். அவர்களும் அதுகேட்டு மிகவும் திருவுள்ளம்

திற்கு த்வயத்தில் பூர்வ வாக்யம் விவரணமாயும், நாராயண பதத்திற்கு அதன் உத்தரவாக்யம் விவரணமாயும் இருத்தலை ரஹஸ்ய நூல்களிற் காண்க.

§ எவ்வாறு சூரியவெப்பத்தினால் தாக்கப்பட்டு விடாய்கொண்டவனுக்கு நீர்பருகுதற்கண் பெருவேட்கை மிக்குத்தோன்றி அதனை ஆவலொடு விலாவறப்பருகுவானோ? அதுபோல சம்சார தாபத்ரயங்களால் தஹிக்கப்பட்டவனுக்குப் பகவத் விஷயமாகிய ஆராவமுதத்தில் வேட்கை மிக்கெழுந்து அதனைப் பிரதிபாதிக்கின்ற த்வயத்தை எப்பொழுதும் தன் அவாவற அநுசந்தித்திருப்பது ஸ்வரூபமாதலின் இவ்வாறு அருளிச்செய்தார். இதனால் த்வயத்தைப் பிறிதொன்றற்குச் சாதனமாக்காது அதனையே பரமப்ரயோஜனமாகக்கொண்டு அநுசந்திக்கத் தக்கதென்பது பெறப்படும்.

* சேதனன் எம்பெருமானுக்கு பரதந்த்ரனாயிருக்குமியல்பினனாதலின் எவ்வகையிலும் தனது பேற்றின் பொருட்டுத் தானே ப்ரவர்த்திக்கில் பரதந்த்ரனை தனதுநிலைக்கும் அடியனாகிய தனது இயல்பிற்கும் முற்றிலும் விரோதமாதலின் இவ்வாறு கூறினர்.

‡ எம்பெருமான் முற்றுமறிந்தவன்; எல்லாம்வல்லவனாதலின் அவனே இதனை யறிந்தாற்றுவன் என்று அவனது பெருமைகளை ஆராய்ந்தறிந்து அமைந்திருத்தலின்றி, சிற்றறிவும் சிறுவலியும் படைத்த சேதனன் தானே பிறர் பொருட்டு ஒன்றைச் செய்து முடிப்பதாக முயலுதல் அவ்வெம்பெருமானது ஞானசக்திகளை குறைவுபட நினைப்பதாமாதலின் இங்ஙனமருளிச்செய்யப்பட்டது.

உகந்திருந்தனர். இதனால் தொடுப்பேரதே குழையும் பூப்போலே † மந்திராந்தர ஸ்பரிசம் பொறாத § த்வயைக நிஷ்டாதிசயமும், த்வயத்தை மற்றொன்றுக்கும் சாதனமாக்கிப் பிசக்கி முசிக்கப் பொறாமையும் ¶ ஸ்வபரவிஷய வ்யாதிசாந்த்யர்த்த ப்ரபதனதோஷ விசேஷமும் விளக்கிக் கூறப்பட்டனவாம்.

நம்பிள்ளை வாட்டந்தீர்ந்து பண்டுபோற்பாங்குற்றுத் தரிசனம் நிர்வஹித்துக்கொண்டு எழுந்தருளியிருக்குங் காலத்தில், ஒருநாள் பின்பழகியபெருமாள் ஜீயர் மடத்திலே யெழுந்தருளியிருந்தனர். அப்பொழுது ஸ்ரீபாதத்துமுதலிகள் அனைவரும் அவரை நோக்கி * ஆழ்வாருடைய நிலை அடியோங்கட்கு உண்டாகவில்லையே; ப்ராப்யம் சித்திக்கும்போது † ஸ்திரீ அன்னபானாதிகளோடே கூடியிருக்கும் நாங்கள் என்னசெய்யக் கடவது? என்று விண்ணப்பஞ் செய்தனர். பிள்ளையும் அவர்களை நோக்கி இந்த அவஸ்தை பிறந்ததில்லையேயாகிலும் சதாசார்ய கடாக்ஷ விசேஷத்தாலே ‡ ஸ்தூல

---

† மந்திராந்த ஸ்பரிசம் பொறாமை—த்வயம் ஒழிந்த வேறு மந்திரங்களின் சம்பந்தத்தைச் சிறிதும் ஸஹித்திராமை.

§ த்வயைக நிஷ்டாதிசயம் – த்வயமொன்றிலேயே மிகவும் ஈடுபட்ட ஒழுக்கமுடைமை.

¶ தனக்கேனும் பிறர்க்கேனும் நோய் நீங்கும் பொருட்டுச் செய்யும் ப்ரபத்தி ப்ரபந்நனுக்கு இழுக்குடைத்து என்பது இதனால் தொகுத்துரைக்கப்பட்டது.

* ஆழ்வார்நிலை யென்றது ப்ராப்யத்தில் த்வரையை. [ப்ராப்யம்—பகவத்கைங்கர்யம்.] அதாவது :— "இருள்தருமாஞாலத்தில் இனிப் பிறவி யான்வேண்டேன்" என்று உலக வாழ்க்கையை வெறுப்புற்றுப் பரமபதத்திற்சென்று எம்பெருமானுக்கு நித்ய கைங்கர்யம்செய்து வாழ்தற்கு விரைதல்.

† "உண்டியே உடையே என உகந்தோடும் இம்மண்டலத்தார்கள் பகவத் கைங்கர்யமாகிய பேற்றுக்குப் பாத்ராரதலின்மையின் ஸ்திரீ அன்னபானாதிகளோடே கூடியிருக்கும் நாங்கள் என்ன செய்யக்கடவதென்று வினவினர் "பெண்டிரும் உண்டியும் இன்பமென் றுலகிற்கொண்டோருறாஉங் கொள்ளாத் துன்பம்" என்றூற் பிறரும் [சிலப்பதிகாரம்].

‡ ஸ்தூல சரீரம்-பஞ்சபூத பரிணாமமாகிய இப்பூதவுடம்பு. இது உரு உடம்பெனவும் படும்.

சரீரங்கழிந்து § ஸூக்ஷ்ம சரீர விமோசனத்திற்கும் கைங்கர்ய ப்ராப்திக்கும் நடுவே ¶ அவ்வவஸ்தையைப் பிறப்பித்து எம்பெருமான் கார்யஞ்செய்வன என்றும் இதற்கு, * "நகலுபாகவதாயம விஷயம் நகச்சக்தி".

† "அவன்றமசெவ்வினையாகிலென்னெங்கோன்
அவன்றமரேயென்றொழிவதல்லால்—நமன்றமரால்
ஆராயப்பட்டறியார்கண்டீர் அரவணைமேற்
பேராயார்க்காட்பட்டார்பேர்"

என்றும் வருவனவே ப்ரமாணங்களாம் என்றருளிச் செய்தனர்.

ஆகையால் இவ்வாத்மாக்கள் உஜ்ஜீவனத்தில் ஊன்றிப்போரும்; எம்பெருமான் ஸ்தூல உடம்பு நீங்கும்போது அவ்வுடம்பில் உவர்ப்பைப் பிறப்பித்து ஸ்ரீ மாலாகாரர்க்குத் தன் வடிவழகைக் காட்டினாற்போலே இவனுக்கும் வடிவழகைக்காட்டி, பரபக்தி பரக்ஞான பரமபக்திகளையுண்டாக்கிக்கொண்டருள்வன் என்றபடி.

பின்னும் முதலிகள் பிள்ளையைத் தண்டனிட்டுநின்று அவரை நோக்கி 'ஸ்வாமி! அவதாரங்கள் இருக்கும்படியென்? ‡ என்று

---

§ ஸூக்ஷ்ம சரீரமாவது.—"பத்துவகை இந்திரிய உணர்வோடும், ஐவகை வாயுக்களோடும், காமவினை விளைவுகளோடுங் கூடிய மனம" இது அரு உடம்பெனவும் படும்.

¶ அவ்வவஸ்தை-ஆழ்வாரது நிலை.

* இதன் கருத்தாவது.—பாகவதர்கள் யமனுக்கு விஷயமாக மாட்டார்களன்றோ! என்பதாம்.

† இதன் பொருளாவது.—சேஷசயனத்தின் மேல் யோக நித்திரை புரிந்தருள்கின்றவனும், ஆய்த்தன்மையில் சிறிதும் குறைவில்லாதவனுமாகிய ஸ்ரீகிருஷ்ணனுக்கு அடிமைப்பட்டவர்களின் திருநாமத்தைத்தாங்கியவர்களும் யமபடர்களாலே "அந்த ஸர்வேசுவரனுடைய பக்தர்கள் எவ்வகையான செயலையுடையவர்களாயிருந்தாலும் எம்பெருமானுடைய பக்தர்களன்றோ!" என்று சொல்லிக் கொண்டாடித் தாங்கள் விலகிப்போவது தவிர (அவர்களால்) ஆராயப்படுதலை அறியமாட்டார்களென்றவாறு.

‡ உலகத்திற் பிறப்புக்குக் காரணம் கர்மம். அங்ஙனமிருக்கவும் கர்மவசப்படாதவனும், குறைவொன்றுமில்லாதவனுமாகிய எம்பெருமானுடைய அவதாரத்துக்கு வேறு ப்ரயோஜனம்யாதோ? வென்பது வினவின் கருத்து.

கேட்டனர். அதற்குப் பிள்ளை § அதிகாரியைப் பெருமையாலே மெய் வெளுத்திருக்கும்; பெறுநூம பிரயோஜனாந்தரபரராலே பயிர்பட்டசோறென்று ¶ நாக்கு வறண்டிருக்கும் என்று அருளிச் செய்தார். ஆசார்யவானான அநந்யப்ரயோஜனனாயிருக்கும் அதிகாரி எம்பெருமானைத் தேடிப்பார்ப்பதிலும் ஜு துர்லபமென்றபடி.

---

§ அவதாரங்கட்குப் பிரயோஜனம சேதனர்களை உய்வித்தலே. எம்பெருமான் அங்ஙனமவதரித்தும் சேதனர்கள் அவனது பெருமையறிந்து வழிபட்டுக் கடைத்தேறாதபோது 'நாம இவ்வாறு அவதரித்தும இச்சேதனர்கள் நம்மையடைந் துய்ந்தனரில்லையே' என்ற ஏக்கத்தினால அவனுக்கு உடம்பு வெளுத்திருக்கும் என்றவாறு. ஒன்றைப்பெற முயன்று அது பெறாதபோது ஏக்கத்தினால உடம்பு வெளுத்துத் தோன்றுவது உலகியற்கை.

¶ எம்பெருமானது பெருமை யறிந்து எவரேனும் சிலா வந்தடைபவரும பொருளையும், பிற இன்பங்களையும் விரும்புகின்ற ப்ரயோஜனாந்தரபரர்களாயிருத்தலின அவர்கள் தன்னால விருப்போடனுபவிக்கும் போக்ய வஸ்துவாயில்லாமையால அந்நிலையில் அவ்வெம்பெருமானுக்கு அருவருப்புத தோன்றுமாதலின 'மயிர்பட்ட சோறென்று நாக்கு வறண்டிருக்கு' மென்றார். அநந்ய ப்ரயோஜனரான உத்தமஞானிகளை எம்பெருமான் பரமபோக்ய வஸ்துவாகக் கருதித் தானே முற்பட்டு மிகக குதூகலத்துடன் ஏற்றுக்கொள்வன்.

"வாரிக்கொண்டுன்னை விழுங்குவன் காணிலென்று
ஆர்வுற்றவென்னை யொழியவென்னில்முன்னம்
பாரித்துத்தானென்னைமுற்றப்பருகினான்
காரொக்குங்காட்கரையப்பனகடியனே"

என்ற ஆழ்வாரருளிச செயல இங்கு நோக்கத்தக்கது. ஞானியை ஈசுவரனுக்கு அன்னமென்றும, ஈசுவரனை ஞானிக்கு அன்னமென்றுங் கூறுதல் வேதாந்த வழக்காதல் காண்க. இவ்வாறு ஈசுவரனுக்கு அன்ன ஸ்தானமாயிருக்கிற சேதனர், தன்னை விரும்பாது வேறோர் பிரயோஜனத்தை விரும்பும்போது மயிர்பட்ட சோற்றை யுண்பவன அருவருப்புறுதலபோல அவர்களை அனுபவிக்க இருந்த எம்பெருமான் வெறுப்புற்று விலகி நீங்குவன் என்றவாறு.

* கட்புலனாகாத இறைவனை ஒருவன் தேடிக்கண்டாலும் காணலாம். ஆனால் அநந்யப்ரயோஜநபரனாயிருக்கிற உத்தமாதிகாரியைத் தேடிக்காண்பது அவ்விறைவனுக்கு அரிதினும் அரிதாம்; என்பதுபற்றி இவ்வாறு கூறினார். "ஸமாத்மா ஸுதுர்லப:" என்று கீதாசார்யன் அருளிச் செய்ததும் இங்கு நோக்கத்தக்கது.

பின்பு ஒருகால் நம்பிள்ளையை, சில ஸ்ரீவைஷ்ணவர்கள் ப்ரபந்நனுக்குத் தஞ்சமாக நம்பியிருக்கத்தக்க அர்த்தம் யாதென்று கேட்டனர்? அதற்குப் பிள்ளை யருளிச்செய்வார்.—ப்ரபந்நன் ப்ரமாணங்கள் அனைவற்றிலும் மிகவும் சிறந்த † மந்திரரத்தினத்தின் ‡ அர்த்தத்தையே நம்பியிருப்பன ; எம்பெருமானைப்பற்றின ஊற்றமுண்டாகில் ஆசார்யனைப்பற்றியிருப்பன் ; ஆசார்யனைப்பற்றிய ஊற்றமுண்டாகில் ஸ்ரீவைஷ்ணவர்களைப்பற்றியிருப்பன்; இனி எம்பெருமானைப்பற்றியிருக்கை § தேவதாந்தர பஜனம்போலாமென்று ஆசார்யன் திருவடிகளையே கட்டிக்கொண்டு கிடப்பன். இவன் இவ்வாறு ஆசாரயன் திருவடிகளைக் கட்டிக்கொண்டு கிடக்க, எம்பெருமான் இவனளவிலே பித்தேறியிருப்பான்; இவ்வாறன்றி இவன் ஸ்ரீவைஷ்ணவர்களைப பற்றியிருக்க, எம்பெருமானைப் போலவே ஆசாரயனும் இவனளவிலே பித்தேறியிருப்பான். இதனால், ¶ தேசிக ததீய சரமநிஷ்டையுண்டாகவே அம்மூவரும் இவனமேல ஆசையுடையவராவார்களென்றவாறு.

ரே. இராமையங்கார், மதுரை.

---

† மந்திர ரத்தினம்—த்வயம்.

‡ ஜபஹோமம் முதலியவற்றிற் கருத்துடையார்க்கு மந்திரங்களின சப்த உச்சாரணமே போதியதாம். ப்ரபந்நர்கள் அங்ஙனமின்றி அம்மந்திரத்தின் உட்பொருளாகிய எம்பெருமானையே உபாயோபேயமாகப்பற்றியிருக்கும் அநந்யப்ரயோஜனராதலின் 'அர்த்தத்தையே நம்பியிருப்பன்' என்றருளினர். "வாசகத்தைக்காட்டில் வாச்யத்தில் ஊன்றுகைக்கடி ஈசுவரனையே உபாயோபேயமென்று நினைத்திருக்கை " என்று லோகதேசிகன் அருளியதுங் காண்க.

§ ஈசுவரன் ஸ்வதந்த்ரனாதலின் தன்னையடைந்தார்க்கு வீடுபேற்றை யருளுதலேயன்றி அவர் கருத்துக்குமாறான வேறு பலத்தை யளித்தலுங்கூடும். ஆசார்யன அவ்வாறு செய்யாது நற்பேற்றையே யளித்தருள்வன. ஆதலின் அவன்பால் ப்ரதிபத்திசெய்வது ஈசுவரனிடம் ப்ரதிபத்தி பண்ணுவதிலும் சிறந்ததாம. "தேவு மற்றறியேன குருகூர்நம்பி பாவினின்னிசைபாடித்திரிவனே" என்ற மதுரகவிகளின ஆசார்ய நிஷ்டையும் இங்கு நோக்கத்தக்கது. இதுபோன்ற ஆசார்ய நிஷ்டையில் சிறந்து நின்றவர்க்கு ப்ரதம நிஷ்டையாகிய ஈசுவர விஷய ப்ரதிபத்தியும் தேவதாந்தர பஜனம் போலப் புல்லிதாய்த் தோன்றுமாதலின் இவ்வாறு கூறப்பட்டது.

¶ தேசிகன்-ஆசார்யன். ததீயர்-ஸ்ரீவைஷ்ணவர்கள். சரம நிஷ்டை-முடிந்த உபாயம் ; என்றது ஆசார்யநிஷ்டையை. இதனைப் பஞ்சமோபாயமென்றும் வழங்குவர். (தொடரும்.)